# உதயநிதி ஸ்டாலினை உடனே விடுவிக்க வேண்டும்!

## கைது செய்யப்பட்ட சில மணி நேரத்திலேயே சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

**சென்னை, ஆக. 6 -**

**சென்னை உயர்நீதிமன்றம், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை காவல் நிலையப் பிணையில் (Station Bail) இன்றே உடனடியாக விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளது. அவதூறு பேச்சு வழக்கில் கைது செய்யப்பட்ட சில மணி நேரங்களிலேயே இந்த அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

தஞ்சாவூரில் நடந்த காவிரி நீர் விவகாரப் போராட்டப் பொதுக்கூட்டத்தில், உதயநிதி ஸ்டாலின் அவதூறாகப் பேசியதாக தமிழக வெற்றிக் கழகம் தரப்பில் புகார் அளிக்கப்பட்டது.

இந்தப் புகாரின் அடிப்படையில் பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்குப்பதிவு செய்த காவல் துறை, நேற்று காலை உதயநிதி ஸ்டாலின் அவர்களை அவரது சென்னை இல்லத்தில் வைத்து கைது செய்தது.

கைது நடவடிக்கையைத் தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவசர மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) போட்டது தவறு என்று வாதாடியதையடுத்து, அவரை இன்றே காவல் நிலையப் பிணையில் உடனடியாக விடுதலை செய்ய உத்தரவிட்டது.


காவல்துறையின் விசாரணை முடிந்தவுடன் உதயநிதி ஸ்டாலின் விடுவிக்கப்படுவார் என தமிழ்நாடு அரசுத் தரப்பு வழக்கறிஞரும் நீதிமன்றத்தில் உறுதி அளித்தார்.

---

கழகத் தலைவர் – மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆக.7 அன்று

# முத்தமிழறிஞர் கலைஞரின் 8வது நினைவு நாள் - அமைதிப் பேரணி!

## ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர்கள் வேண்டுகோள்!



தகைமைசால் தலைவராக எழுத்தாளராக கவிஞராக சொற்பொழிவாளராக திரைக்கதை வசனகர்த்தாவாக இலக்கியவாதியாக திரைப்படத் தயாரிப்பாளராக தலைசிறந்த நிர்வாகியாக தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8வது நினைவுநாளினையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் **“அமைதிப் பேரணி”, ஆகஸ்ட்7, வெள்ளிக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.**

முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு சென்னை மேற்கு சென்னை தென்மேற்கு சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நாள் : 04.08.2026 **சென்னை மாவட்ட தி.மு.க.**

---

மக்கள் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்கும்

# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது - அரசின் அப்பட்டமான அடக்குமுறை!

## இந்திய குடியரசுக் கட்சி மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன் கடும் கண்டனம்!



சென்னை, ஆக.6-

மக்கள் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்கும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைக் கைது செய்தது த.வெ.க. அரசின் அப்பட்டமான அடக்குமுறை என இந்திய குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

மக்களாட்சி தத்துவத்தின் வழியில், மக்கள் நலன் சார்ந்த பிரச்சனைகளுக்காகவும், மக்களின் உரிமைகளுக்காகவும் ஜனநாயக முறையில் போராட்டத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைக் காவல்துறை மூலம் கைது செய்திருப்பது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

அரசின் இந்த அப்பட்டமான அடக்குமுறை நடவடிக்கையை இந்திய குடியரசு கட்சியின் சார்பில் மிகக் கடுமையாகக் கண்டிக்கிறேன். ஜனநாயக நாட்டின் முதுகெலும்பாக விளங்குவது எதிர்க்கட்சிகளின் குரல்தான். அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளின் படி, மக்கள் சார்ந்த பிரச்சனைகளில் கண்டனத்தைப் பதிவு செய்வதும், போராட்டம் நடத்துவதும் எதிர்க்கட்சிகளின் ஜனநாயகக் கடமையாகும். அதை அடக்குமுறையின் மூலம் நசுக்க நினைப்பது மக்களாட்சி நெறிமுறைகளுக்கே எதிரானது.

மாநிலத்தின் உரிமைகளுக்காகவும், மக்களின் நலனுக்காகவும் தொடர்ந்து களத்தில் நின்று குரல்கொடுத்து வரும் எதிர்க்கட்சித் தலைவரின் குரலை முடக்க நினைக்கும் எந்தவொரு முயற்சியும் ஒருபோதும் வெற்றி பெறாது. அடக்குமுறைகளை ஏவி எதிர்க்கட்சிகளின் ஜனநாயகப் போராட்டங்களை ஒடுக்கிவிடலாம் என்று அரசு நினைப்பது முற்றிலும் தவறான அணுகுமுறையாகும்.

எனவே, கைது செய்யப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று இந்திய குடியரசு கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு இந்திய குடியரசு கட்சி மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன் கூறியுள்ளார்.

---

உதயநிதி ஸ்டாலின் கைது: நீதிமன்ற அறிவுரையைப் புறக்கணித்து –

# நாட்டின் அமைதியைக் கெடுக்கும் த.வெ.க. அரசின் செயல் மிகுந்த கண்டனத்திற்குரியது!

## திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அறிக்கை!



***சென்னை, ஆக.6-***

***சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ள திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன்,‘ ‘நீதிமன்ற அறிவுரையைப் புறக்கணித்ததோடு, நாட்டின் அமைதியைக் கெடுக்கும் இந்தச் செயலை த.வெ.க. அரசு மேற்கொண்டிருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது” என்று குறிப்பிட்டுள்ளார்.***

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை கைது செய்யப்பட்டிருக்கிறார்.

நேற்று முன்தினம் தஞ்சையில் நடைபெற்ற விவசாயிகளுக்கான ஆர்ப்பாட்டத்தில், அவர் பேசிய ஒரு பேச்சை அடிப்படையாக வைத்து, அவர் கைது செய்யப்பட்டு இருக்கிறார். அங்கு, தான் பேசாத செய்திகளை அரசு திரித்துச் சொல்வதாக உதயநிதியின் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

பகல் 12 மணி வரையில் கைது செய்ய வேண்டாம் என்று உயர் நீதிமன்ற நீதிபதி அறிவுறுத்திய பின்பும், காலை 11 மணிக்கு முன்பே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரு சமூகத்தினருக்கு இடையே கலவரத்தை உருவாக்க முயன்றதாகவும், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழுமாக, ஒன்பது பிரிவுகளில் உதயநிதியின் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாகக் காவலிதுறையினர் கூறுகின்றனர்.

இப்பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ஒருவருக்கு. 5 ஆண்டு காலம் வரையில் சிறைத்தண்டனை வழங்கலாம் என்று வழக்கறிஞர்கள் கூறுகின்றனர்.

எனவே இது அரசின் அராஜகமான போக்காகவும், அப்பட்டமான பழிவாங்கும் நடவடிக்கையாகவும் உள்ளது. நாளை முதல் தொடங்கவிருக்கும் சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரைக் கலந்துகொள்ள விடாமல் தடுக்கும் நடவடிக்கையாகவும் இதனைப் பார்க்கலாம்.

நீதிமன்ற அறிவுரையைப் புறக்கணித்ததோடு, நாட்டில் அமைதியையும் கெடுக்கும் இந்தச் செயலை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு இருப்பது மிகுந்த கண்டனத்திற்கு உரியது.

தமிழ்நாட்டின் இன்றைய சூழல், அறிவிக்கப்படாத அவசர நிலைக் காலம்போல இருக்கிறது. தமிழ்நாடு அரசின் இப்போக்கை திராவிட இயக்கத் தமிழர் பேரவை, மிக மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

புவிசார் குறியீடு பெற்ற

# ஈரோடு மஞ்சளுக்கு நேரடி ஆதரவு வழங்கத் தவறிய ஒன்றிய அரசு!

## மக்களவையில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் கண்டனம்!



**புதுடெல்லி, ஆக.6-**

**புவிசார் குறியீடு பெற்ற ஈரோடு மஞ்சளுக்கு நேரடி ஆதரவு வழங்கத் தவறிய ஒன்றிய அரசு; பொதுத் திட்டங்களையே சுட்டிக்காட்டி பதிலளிப்புக்கு மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கண்டித்துள்ளார்.**

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே.இ. பிரகாஷ், தற்போதைய காரீப் பருவத்தில் புவிசார் குறியீடு (GI) பெற்ற ஈரோடு மஞ்சளின் உற்பத்தி, சந்தைக்கு வரத்து மற்றும் விலை நிலவரம் குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா என்று ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சரிடம் விளக்கம் கோரினார். மேலும், காலநிலை மாற்றம் மற்றும் உற்பத்திச் சவால்களால் பாதிக்கப்பட்ட மஞ்சள் விவசாயி களுக்கு மத்திய அரசின் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள், ஈரோடு உள்ளிட்ட மஞ்சள் உற்பத்தி பகுதிகளில் அறுவடைக்குப் பிந்தைய உள்கட்டமைப்பு, மதிப்புக்கூட்டல், சேமிப்பு, ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் சந்தை இணைப்புகளை வலுப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், அத்துடன் மஞ்சள் விவசாயிகளுக்கான விலை நிலைநிறுத்தம், சந்தைத் தகவல் மற்றும் இடர் மேலாண்மை ஆதரவை மேம்படுத்தும் திட்டங்கள் குறித்து விளக்கம் கோரினார்.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் அளித்த பதில் பின்வருமாறு

(அ): புவிசார் குறியீடு பெற்ற ஈரோடு மஞ்சளின் உற்பத்தி, சந்தைக்கு வரத்து மற்றும் விலை நிலவரம் குறித்து தற்போதைய காரீப் பருவத்தில் குறி ப்பிட்ட ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கு இருப்பினும், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் தகவலின்படி, சாதகமான காலநிலை, பூச்சி மற்றும் நோய் தாக்கம் குறைந்திருத்தல் மற்றும் நல்ல சந்தை விலையால், நாட்டில் மஞ்சள் சாகுபடியும் உற்பத்தியும் அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு (ஈரோடு) பகுதியில் மஞ்சளின் சராசரி ஆண்டு விலை விவரங்களையும் அமைச்சகம் வழங்கியுள்ளது.

(ஆ): இயற்கை பேரிடர் காலங்களில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வது முதன்மையாக மாநில அரசுகளின் பொறுப்பு என்றும், மாநில பேரிடர் மீட்பு நிதி (SDRF) மூலம் அவை செயல்படுத்தப்படுகின்றன என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடுமையான பேரிடர் ஏற்பட்டால், நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையின்படி தேசிய பேரிடர் மீட்பு நிதி (NDRF) மூலம் கூடுதல் உதவி வழங்கப்படும் என்றும் கூறியுள்ளது.

மேலும், SDRF மற்றும் NDRF மூலம் வழங்கப்படும் நிதி இழப்பீடாக அல்ல; நிவாரண உதவியாக மட்டுமே வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளது.

இயற்கை பேரிடர்கள் மற்றும் பாதகமான வானிலை காரணமாக ஏற்படும் பயிர் சேதங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கில் பிரதமர் பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) மற்றும் மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டம் (RWBCIS) செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) மூலம் காலநிலை மாற்றத்துக்கு ஏற்ற வேளாண் புதுமைகள் (NICRA) திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(இ) மற்றும் (ஈ): உணவுப் பதப்படுத்தல் தொழில்துறை அமைச்சகம் PMKSY, PMFME மற்றும் PLISFPI உள்ளிட்ட திட்டங்கள் மூலம் உணவுப் பதப்படுத்தல், அறுவடைக்குப் பிந்தைய உள்கட்டமைப்பு, சேமிப்பு, மதிப்புக்கூட்டல் மற்றும் விநியோகச் சங்கிலியை மேம்படுத்தி வருவதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் AML AIF மற்றும் MIDH உள்ளிட்ட திட்டங்கள் மூலம் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, சேமிப்பு மற்றும் பதப்படுத்தல் உள்கட்டமைப்பை வலுப்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், 10,000 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPO) திட்டத்தின் கீழ், ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்தைச் சேர்ந்த பொய்கை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் (Poigai Farmer Producer Company Limited) மஞ்சளை அடையாளப் பொருளாகக் கொண்டு உதவி பெற்றுள்ளதாகவும், கிளஸ்டர் அடிப்படையிலான வணிக அமைப்பிற்கு (CHBO) ரூ.25 லட்சமும், FPO-க்கு ரூ.18 லட்சமும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், 2023ஆம் ஆண்டு தேசிய மஞ்சள் வாரியம் அமைக்கப்பட்டு, மஞ்சள் உற்பத்தி, மதிப்புக்கூட்டல், ஏற்றுமதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டை ஊக்குவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

மசாலா வாரியம் (Spices Board) தனது SPICED திட்டத்தின் கீழ், ஈரோடு உள்ளிட்ட மஞ்சள் உற்பத்தியாளர்களுக்காக அறுவடைக்குப் பிந்தைய உள்கட்டமைப்பு, சேமிப்பு. மதிப்புக்கூட்டல், ஏற்றுமதி வசதி மற்றும் சந்தை இணைப்புகளை மேம்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது. மஞ்சள் வேகவைக்கும் கருவிகள், பாலிஷ் இயந்திரங்கள், இயற்கைச் சான்றிதழ், வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்புகள், தரப் பரிசோதனை மற்றும் ஏற்றுமதி அனுமதி உள்ளிட்ட வசதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் கூறி யுள்ளது.

மேலும், MIDH, RKVY, PKVY, PMKSY, PMFBY, NRM, (Soil Health Card) மற்றும் e-NAM உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மஞ்சள் சாகுபடி மற்றும் சந்தைப்படுத்தலுக்கு ஆதரவளித்து வருவதாகவும், e-NAM மூலம் விவசாயிகள் நாடு முழுவதும் விரிவான சந்தை அணுகல், வெளிப்படையான இணையவழி ஏலம் மற்றும் விற்பனைத் தொகையை நேரடியாக வங்கி கணக்கில் பெறும் வசதிகளைப் பெற்றுவருவதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா. இராஜேந்திரன் தலைமையில் கழக முன்னோடிகள் சாலை மறியலில் ஈடுபட்டு கைதானார்கள்.



தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை கண்டித்து சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியா பட்டணம் ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய செயலாளர் ஏ. விஜயகுமார், தலைமையில் கழக நிர்வாகிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர்